தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 498/2025

LW : 1 PW :1

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜேஷ் | த / பெ. | திரு. கங்காதரன் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தாலுக்கா | தஞ்சாவூர் |
| தொழில் | : | துணை இயக்குநர் | வயது | 38 |

LW : 1 PW : 1

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**12.03.2026.**

நான் தற்போது தஞ்சாவூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். திருவாரூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநராக கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறேன். நான் திருவாரூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநராக பதவி வகித்த போது திருவாரூர் மாவட்டம் குடவாசல் தாலுக்கா, குளிக்கரை அஞ்சல், வெள்ளக்குடி கிராமம், புலிவலம் ரோடு, எண் 266/1 ஸ்ரீ ராகவேந்திரா அல்கலிஸ் பிரைவேட் லிமிட் பதிவு எண். TRR00137 என்ற தொழிற்சாலையை 30.03.2023 அன்று பிற்பகல் 12.40 மணிக்கு ஆய்வு செய்தேன்.

திரு. R. சத்யவாகீஸ்வரன், த/பெ. ராமச்சந்திரன் என்பவர் தொழிற்சாலையில் உரிமையாளர் ஆவார். திரு. J. ஸ்ரீகாந்த், த/பெ. ஜெயராமன்

என்பவர் தொழிற்சாலையில் மேலாளர் ஆவார். மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் 30.03.2023 தேதியிட்டு ஆய்வறிக்கை தயார் செய்தேன்.

அந்த ஆய்வறிக்கை **அ.த.சா1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேலும் ஆய்வின் போது ஒப்புதல் பெறாமல் கூடுதல் குதிரைதிறன் இயந்திரங்களை உற்பத்திக்கு பயன்படுத்தியதற்கும் தொழிற்சாலை வளாகத்தில் Electric distribution panel க்கு முன்புறம் ரப்பர் சீட் விரிக்கபடாததற்கும் பயன்பாட்டில் இருந்த இயந்திரங்களில் சுழலும் பாகங்களுக்கு பாதுகாப்பு கவசம் அமைக்கப்படாததற்கும் பயன்பாட்டில் இருந்த காற்று அழுத்த கலனுக்கு சோதனை கட்டணம் செலுத்தாததற்கும், பயன்பாட்டில் இருந்த HOIST களுக்கு தகுதி வாய்ந்த நபரிடம் இருந்து சோதனை அறிக்கை பெறப்பட்டு சமர்ப்பிக்காததற்கும் Oven க்கு தகுதி வாய்ந்த நபரிடம் இருந்து சோதனை அறிக்கை பெறப்பட்டு சமர்ப்பிக்காதற்கும் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு Certifying surgeon னால் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளதாதற்கும் தொழிற்சாலை உரிமையாளர்க்கு 20.04.2023 தேதியிட்டு தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் 1950 ன் கீழ் காரணம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டது.

அந்த அறிவிப்பு **அ.த.சா.2**. ஆகவும் அதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **அ.த.சா.3. ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

தொழிற்சாலை வளாகத்தில் Electric distribution panel க்கு முன்புறம் ரப்பர் சீட் விரிக்கபடாதற்கும் பயன்பாட்டில் இருந்த இயந்திரங்களில் சுழலும் பாகங்களுக்கு பாதுகாப்பு கவசம் அமைக்கப்படாததற்கும் பயன்பாட்டில் இருந்த HOIST-களுக்கு தகுதி வாய்ந்த நபரிடம் இருந்து சோதனை அறிக்கை பெறப்பட்டு சமர்ப்பிக்காததற்கும் Oven க்கு தகுதி வாய்ந்த நபரிடம் இருந்து சோதனை அறிக்கை பெறப்பட்டு சமர்ப்பிக்காதற்கும் படிவம் 25 ன் படியான பதிவேடு பராமரிக்காதற்கும் படிவம் 12 ன் பதிவேடு பராமரிக்காதற்கும் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு Certifying surgeon னால் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளதாதற்கும் தொழிற்சாலை மேலாளர்க்கு 20.04.2023

தேதியிட்டு தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் 1950 ன் கீழ் காரணம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டது.

அந்த அறிவிப்பு **அ.த.சா.4. ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது** அதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **அ.த.சா.5. ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

மேலும் கொடுக்கப்பட்ட காரணம் கோரும் அறிவிப்பிற்கான திருத்த சீட்டு தொழிற்சாலை உரிமையாளர்க்கு 18.05.2023 தேதியிட்டு வழங்கப்பட்டது. காரணம் கோரும் அறிவிப்பிற்கான திருத்த சீட்டு தொழிற்சாலை மேலாளர்க்கு 18.05.2023 தேதியிட்டு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து வழங்கப்பட்ட காரணம் கோரும் அறிவிப்பிற்கு தொழிற்சாலை உரிமையாளரிடமிருந்து 18.05.2023 தேதியிட்ட பதில் கடிதம் 29.05.2023 அன்று பெறப்பட்டது.

அது **அ.த.சா.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அதனை தொடர்ந்து வழங்கப்பட்ட காரணம் கோரும் அறிவிப்பிற்கு தொழிற்சாலை மேலாளர்க்கு 18.05.2023 தேதியிட்ட பதில் கடிதம் 29.05.2023 அன்று பெறப்பட்டது.

அது **அ.த.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அதனை தொடர்ந்து தொழிற்சாலை உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட விளக்கத்தின்அடிப்படையில் காரணம் கோரும் அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட முரண்பாட்டு இனங்கள் 1,2,3,4,7 ஆகியவற்றுக்கு அளிக்கப்பட்ட விளக்கம் ஏற்கதக்காதகவும் இனங்கள் 5 மற்றும் 6 க்கு ஏற்கதக்கதாக இல்லை என தெரிவித்து 13.06.2023 தேதியிட்டு அன்றைய திருவாரூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் திருமதி. அனிதா ரோஸ்லின் மேரி அவர்களால் பதில் திருப்தி இன்மை தொடர்பாக மேல்நடவடிக்கை கடிதம் அனுப்பபட்டது.

அது **அ.த.சா.8. ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அதனை தொடர்ந்து தொழிற்சாலை மேலாளர்க்கு பெறப்பட்ட விளக்கத்தின் அடிப்படையில் காரணம் கோரும் அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட முரண்பாட்டு இனங்கள் 1,2,5,6,7 ஆகியவற்றுக்கு அளிக்கப்பட்ட விளக்கம் ஏற்கதக்கதாக உள்ளது ஆனால் இனங்கள் 3 மற்றும் 4 ற்கு விளக்கம்

ஏற்கதக்கதாக இல்லை என தெரிவித்து 13.06.2023 தேதியிட்டு அன்றைய திருவாரூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் திருமதி. அனிதா ரோஸ்லின் மேரி அவர்களால் பதில் திருப்தி இன்மை தொடர்பாக மேல்நடவடிக்கை கடிதம் அனுப்பபட்டது.

அது **அ.த.சா.09. ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அதனை தொடர்ந்து 20.06.2023 தேதியிட்டு திருச்சிராப்பள்ளி தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநரிடமிருந்து தொழிற்சாலை உரிமையாளர் மீது வழக்கு தொடர அனுமதி ஆணை பெறப்பட்டது.

அது **அ.த.சா.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அதனை தொடர்ந்து 20.06.2023 தேதியிட்டு திருச்சிராப்பள்ளி தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநரிடமிருந்து தொழிற்சாலை மேலாளர் மீது வழக்கு தொடர அனுமதி ஆணை பெறப்பட்டது.

அது **அ.த.சா.11. ஆக குறியீடு செய்யப்படுகிறது**

மேலும் தொழிற்சாலை உரிமையாளரால் தொழிற்சாலை உரிமம் புதுப்பிக்க வேண்டி விண்ணப்ப படிவம் சமர்பிக்கப்பட்டது.

அந்த விண்ணப்பம் படிவம் 2 **அ.தா.சா.12. ஆக குறியீடு செய்யப்படுகிறது** அதனை தொடர்ந்து மாண்புமிகு நீதிமன்றத்தில் 21.06.2023 தேதியிட்டு அன்றைய திருவாரூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் திருமதி. அனிதா ரோஸ்லின் மேரி அவர்களால் தனிமுறையீடு தாக்கல் செய்யப்பட்டது. எனவே மேல்குறிப்பிட்ட குற்றம் சாட்டப்பட்ட நபர்களை விசாரித்து தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 92 ன் கீழ் தகுந்த தண்டனை வழங்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தொழிற்சாலையானது சட்டவிதிகளுக்கு உட்பட்டு முறையாக தான் செயல்படுகிறது என்றாலும் மேலும் முறையாக தொழிற்சாலை சோதனை செய்யப்பட்டதற்கான சோதனை விவரங்கள் அடங்கிய பதிவேடுகள் பரமாரிக்கப்பட்டு வருகின்றது என்றாலும் அவை அனைத்தும் ஆய்வின் போது காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னாலும்

சரியல்ல. காரணம் கோரும் அறிவிப்பு கொடுக்கப்பட்டு அந்த அறிவிப்பில் கண்டுள்ள விதி மீறல்கள் சரிசெய்யப்பட்டு தங்கள் வசம் முறையாக அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னாலும் சரியல்ல.

தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்கள் அனைத்தும் உரிய தகுதி வாய்ந்த நபரை கொண்டு முறையாக பராமரிக்கப்படுகிறது என்று சொன்னாலும் சரியல்ல. மேற்படி வழக்கானது புள்ளி விவரத்திற்கான போடப்பட்ட வழக்கு என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிகளை பழி வாங்கும் நோக்கத்தோடு இந்த பொய் வழக்கு போடப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த குற்றச்சாட்டுக்கும் எந்தவித சம்பந்தம் இல்லை என்பதால் எதிரிகளை இந்த குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு அதை சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அது சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.03.12 23:08:20 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.